**தலைப்பு 112 – வெளிவிவகார அமைச்சு**

--------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---------------------------------------------------

வெளிவிவகார அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிவிவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிவிவகார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) வெளிவிவகார அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்.

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக இல்லாமை.

2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாட்டிலிருந்து விலகிச் சென்றுள்ள ஒரு சந்தர்ப்பம் கீழே உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அறிவிக்கப்படாத எந்தவொரு தொடர்பையோ அல்லது பொறுப்பையோ முன்னைய ஆண்டின் செலவீனமாக 2019 ஆண்டில் தீர்க்கப்படாதாயினும் வெளிநாட்டு அமைச்சினதும் தூதரங்களினதும் அறிவிக்கப்படாததுமான ரூபா 10,884,464 க்கான பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். | தூதரங்கள் பொறுப்புக்களை அறிவிக்கும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகளினால் இவ்வாறு நடந்துள்ளபோதிலும் முன்னால் பிழை திருத்தம் செய்யப்படும். |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

-----------------------------------------------

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடங்கிய முற்பணம் பெறல், மாதாந்த கணக்கு பொழிப்பாக்கலுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,934,037 க்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயினும் அமைச்சின் தொங்கல் கணக்கின் படி அவ்வித்தியாசம் ரூபா 9,896,124 ஆக சரி செய்யப்பட்டுள்ளமையால் ரூபா 37,913 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | முற்பணம் பெறல் மாதாந்த கணக்கு பொழிப்புக்களுடன் வித்தியாசப்படல் ஆகாமை. | மாதாந்த கணனி கணக்கு அறிக்கைகளில் ஏற்படும் பிழைகளை திருத்தம் செய்யப்படும் நாளேட்டு குறிப்புக்கள் மூலம் இறுதி திறைசேரி அச்சிடல்களை பெற்று நிதி கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தமையால் வித்தியாசம் காணப்படவில்லை. |
| (ஆ) | வெளிவிவகார அமைச்சினால் ஏனைய செலவீன தலைப்புக்காக செய்யப்பட்டுள்ள செலவு ரூபா 778,863,553 ஆக தொங்கல் கணக்கில் சரி செய்யப்பட்டிருப்பினும் மாதாந்த கணக்கு பொழிப்பாக்கலின் படி அது ரூபா 786,835,573 ஆனதால் ரூபா 7,972,022 க்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கை பிழையின்றி சரிபார்த்து ஆவன செய்ய வேண்டியமை. | தொங்கல் கணக்கு பற்றி விஷேட கவனம் செலுத்தி வித்தியாசங்கள் இருப்பின் முன்னால் சரி செய்வதற்கு ஆவன செய்வேன். |

**1.6.3 நிதி நிலைமை பற்றிய கூற்று**

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் விற்கப்பட்ட 05 வாகனங்களின் பெறுமதி ரூபா 11,900,000 ஆயினும் 06 வாகனங்களின் பெறுமதியான ரூபா 1,390,000 நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | நீக்கப்பட்ட பெறுமதியாக சம்பந்தபட்ட வாகனங்களின் கிரய பெறுமதியை உள்ளடக்கப்பட வேண்டியமை | விடையளிக்கப்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 03 தூதராலயங்களால் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட ரூபா 13,875,228 கிரயமான 03 வாகனங்களின் விற்பனை பெறுமதியான ரூபா 215,673 பணத்தை அவ்வாகனங்களின் நீக்கப்பட்ட பெறுமதியாக இனங்காணப்பட்டுள்ளது. | நீக்கப்பட்ட மூன்று வாகனங்களின் கிரய பெறுமதியை நீக்கப்பட்ட பெறுமதியாக இனங்காணல் வேண்டியமை. | முன்னால் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.4 காசு பாய்ச்சல் கூற்று**

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முதலீட்டு செயல்பாடுகளில் ஏற்பட்ட காசுபாய்ச்சலினுள் | வாகன விற்பனையில் கிடைத்த பணத்தை | வாகன விற்பனையில் கிடைத்த பணம் |

| | | | |
|---|---|---|---|
| | வாகன விற்பனையில் பெற்ற ரூபா 10,020,720 பணம் உள்ளடக்கப்படவில்லை. | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்க வேண்டியமை. | முதலீட்டு செயற்பாடுகளினுல் உள்ளடங்கவில்லை என்பதனை ஏற்றுகொள்கிறேன். அப்பணம் நடவடிக்கை செயல்பாடுகளில் உள்ளடங்கப்பட்டிருப்பதை அறியத்தருகிறேன். மேற்படி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நிரல்கள் உள்ளடக்க ஆவன செய்யப்படும். |
| (ஆ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்படவில்லை. | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவுகளும் செலுத்தல்களும் முதலீட்டு செயல்பாடுகளில் உருவான நிகர காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்படல். | மேற்படி நிதிக்கூற்று தயாரிக்கும்போது சரியாக தரவுகள் உட்படுத்த ஆவன செய்யப்படும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தனிநபர் சம்பளம் மற்றும் நடவடிக்கை செலவீனங்களை கணக்கிடும் போது கடந்த ஆண்டில் செலுத்தப்படாத கட்டுநிதி மிகுதி ரூபா 145,391,699 பணமும் மற்றும் நிதி செயலாற்று கூற்றின் வேறுபாடான ரூபா 726,968,663 பணமும் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 267/2018 கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செய்தல். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்காக சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.5 முற்பணக்கணக்கு மீதிகள்

கீழ் காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதி மாற்றலாகி சென்ற ஓய்வு பெற்றுச் சென்ற, மரணித்த, சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டஇ சேவையை பூர்த்தி செய்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோத்தர்களினதும் நிலுவைக் கடன்களின் தொகை ரூபா 2,326,566 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை தாண்டிய மிகுதிக் கடன்களின் தொகை ரூபா 1,259,997 ஆகும். | 2004 அக்டோபர் 11 ஆம் திகதிய 118 இலக்கம் கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 1 மற்றும் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இடம் மாற்றலாகி சென்ற உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும் ஏனைய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பிணையாளிகளிடமிருந்து கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இம்மிகுதிகளை தள்ளுபடி செய்வதற்கு ஏற்கனவே திறைசேரியின் ஒப்புதலை பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுத்த வண்ணம் உள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் அரச உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக்கூற்றில் காணப்பட்ட 05 வருடங்களுக்கு கூடிய இனங்காணப்படாத மிகுதிக்கடன்களின் தொகையாகிய ரூபா 1,515,668 பணத்தை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மிகுதிகள் இவ்வருடத்திற்குள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை.

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **இழப்பு தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 110 பிரகாரம் வெளிநாட்டு தூதரகங்கள் சம்பந்தமான இழப்பு பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்தின் படி இழப்புக்கான பதிவேடொன்று பேணப்படுதல். | நிதிப்பிரமாணம் 110 பிரகாரம் வெளிநாட்டு தூதரகங்கள் சம்பந்தமான இழப்பு பதிவேடொன்று தயாரித்து பேணப்படுதல் மற்றும் அதை நாளதுவரை செய்யுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | | |
| பயன்படுத்தபடாமை | | |
| செலவீன விடயங்கள் 04 இற்காக ஒதுக்கபபட்டிருந்த | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடபட்டிருக்கும் | இவ்வமைச்சின் செயற்பாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 3.66 மில்லியன் மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகள் நிறைவு செய்வதற்காக வருடாந்த செலவின மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். | இலங்கைக்குள் போன்று 67 தூதரகங்களில் செய்யப்படுகின்றன ஆகையினால் நிலவும் சிக்கல்கள் தேவைபாடுகளின் பல்வகைத்தன்மை மற்றும் நாணய ஏற்றத்தாழ்வுக்கு உட்படுவதனால் ஏற்படும் தாக்கத்தினால் செலவினங்களை வரையரைபடுத்தி எதிர்வுகூறல் கடினமாயினும் இயன்றளவு பிழையின்றி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | மிகை நிதி ஏற்பாடு<br>--------------------------------<br>ஒதுக்கப்பட்டிருந்தமை<br>----------------------------------<br>07 செலவின விடயங்களுக்காக ரூபா மில்லியன் 325 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 54 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்.

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றிலுள்ள 31 செலவின விடயங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த ரூபா மில்லியன் 9,925 கான ஒதுக்கீட்டைத் தாண்டி ரூபா மில்லியன் 244 கான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | தேறிய ஒதுக்கீட்டை தாண்டி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படாமை. | அமைச்சில் அவ்வப்பிரிவுகளிலும் சகல வெளிநாட்டு தூதரகங்களினாலும் முன்வைக்கப்பட்ட தகவல்கள் சரியாக இல்லாமையும் விடுபடுதல்களும் கடன்கள் அல்லது பொறுப்புக்கள் முறையாக இனங்காணப்படாமை ஆகிய காரணிகளால் சகல கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிகூற்றில் உள்ளடக்க இயலாது உள்ளன. முன்னே அக்குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவு.

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வெளிநாட்டு தூதரகங்களில் 2018 திசெம்பர் 31 தினத்திற்கு 1 | ஏற்பாடுகளுக்கமைய நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க | வதிவிடத்தை விட்டு வெளியேறிய பிறகு |

| | | |
|---|---|---|
| வருடம் முதல் 27 வருடங்கள் வரையிலான காலவீச்சில் செலுத்தப்படாத முற்பண மிகுதி ரூபா மில்லியன் 392.37 ஆக இருந்தது. அதில் உள்ள வதிந்த மற்றும் வதியாத வீடுகளுக்கான பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா மில்லியன் 342.39 உம் மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா மில்லியன் 49.98 ஆக இருந்தது. | வேண்டி உள்ளமை. | தான் இப்பணத்தை மீள் அறவிடமுடியும். தற்போதைய கணக்கு முறையால் முற்பணமாக அறியப்படுவதுடன் திறைசேரியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அறியப்பட்டுள்ள விதம் சம்பந்தமாக ஒரு முறைமையை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏனைய முற்கண வைப்புக்கள் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 2.4 வைப்பு மிகுதிகள்

--------------------------------

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 565(5) பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு பொழிப்பாக்கல் கூற்று அடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளரிடம் அனுப்ப வேண்டியுள்ள ஔ’ள போதும் அவ’வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 565(5) பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கான மாதாந்த வைப்பு பொழிப்பாக்கல் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியமை. | தற்போது நடைமுறையில் உள்ள கணக்கியல் அமைப்பு நாளதுவரை (on-time) முறைமை அல்லாமையால் 67 தூதரங்களில் பொதுவைப்பு கணக்குகளின் மாதாந்த பொழிப்பாக்கலொன்று நிதிப்பிரமாணம் 565(5) பிரகாரம் சமர்ப்பிக்க இயலாது உள்ளது. நாளதுவரை (on-time) |

|  |  |  |
|---|---|---|
|  |  | கணக்கு முறைமைக்கு மாற்றலாவதற்கு தற்போது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையினால் நிதி பிரமாணம் பிரகாரம் தேவையை பூர்த்தி செய்ய முன்னே இயலுமாகும் என்பதனை அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள கணபரா இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலத்திற்கு உரிய அவுஸ்திரேலிய டொலர் 2,589,000 பெறுமதியான இரண்டு கட்டிடங்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து மற்றும் 2007 ஆண்டிலிருந்து பாவணையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. அதில் ஒரு கட்டிடத்தை உயர்ஸ்த்தானிகரது உத்தியோகபூர்வ இல்லமாக மாற்றுவதற்கு 2017 செப்டெம்பர் 26 திகதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 2018 வருடவரவு செலவுதிட்டத்தில் அதற்கான ரூபா மில்லியன் 260 | வினைத்திறனுடன் ஒதுக்கீடுகளும் சொத்துக்களும் பாவனை செய்ய பட வேண்டியமை. | 2019 யூன் 26 திகதிய அமப/19/1616/111/019 இலக்கம் கொண்ட அமைச்சரவையின் முடிவின் படி பகிரங்க விலை மனுக்கோரலின் மூலம் இலங்கையிலிருந்து அல்லது சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து கொந்தராத்காரரொருவரை தேர்ந்தெடுக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் அது சம்பந்தமான எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கனடாவில் டொரன்டோ மற்றும் ஒட்டாவாவில் அமைந்துள்ள தூதராலய காரியாலயங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக (ஒட்டோவா உத்தியோகபூர்வ இல்லத்தை தவிர்த்து) வாடகையாக மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 93.0 செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கான மாற்று நடவடிக்கையாக சொத்தை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. | சொத்தினை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு பற்றி தேடிப்பார்க்க வேண்டியமை. | டொறன்டோ கன்சியுளர் காரியாலத்திற்காக சொத்து கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. இதற்கான மேலும் நடவடிக்கை முன்னால் எடுக்கப்படவுள்ளது. |
| (இ) | மாற்று நடவடிக்கையொன்றை பற்றி தேடிப் பார்க்காது சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த கனடாவில் ஒடடோவா உயர்ஸ்தானகர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புதுப்பிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா மில்லியன் 26.71 செலவிடப்பட்டுள்ளது. | புது உத்தியோகபூர்வ இல்லமொன்று பெற்றக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியமை. | உத்தியோகபூர்வ ஸ்தாபகர் இல்லமொன்றும் ஸ்தானிகர் காரியாலயமொன்றும் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு பற்றிய சாத்திய கூற்றை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகையினால் அதன்படி முன் தீர்மானங்கள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3.2 நட்டங்களும் இழப்புக்களும்

--------------------------------------------------

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு தூதராலயங்கள் சம்பந்தப்பட்ட 46 சம்பவங்களுக்குரிய ரூபா மில்லியன் 77.16 க்கான நட்டங்களுக்கும் விடுபடுதல்களுக்கும் 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் முறைப்படி அவைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான பரீட்சையினை செய்து தீர்க்கப்படுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்க படவேண்டியமை. | சம்பந்தப்பட்ட பெறுமதியினை வெவ்வேறாக இனங்கண்டு சம்பந்தபட்ட காரியாலயம் ஊடாக தகவல்களை பெற்று நிதிபிரமாணம் 106 மற்றும் 113 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பலவித சம்பவங்கள் காரணமாக அமைச்சுக்கு கிடைக்கவேண்டி உள்ளதாக அறிய தரப்பட்டிருக்கின்ற ரூபா மில்லியன் 1.09 பணம் நிதி பிரமாணம் 104 பிரகாரம் தேவையான விசாரணை நடாத்தப்ட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிபிரமாணங்கள் பிரகாரம் தேவையான விசாரணை செய்து தீர்க்கப்படுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கபட வேண்டியமை | நட்டங்கள் இழப்புக்கள் பற்றி மேலும் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (இ) | பலவித காரணிகளால் அறவிடபடமுடியாது இருக்கும் மொத்த தொகையாகிய ரூபா மில்லியன் 9.89 பணத்தை நட்டம் மற்றும் விட்டு | தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கபட வேண்டியமை | அறவிடப்படாத பாதுகாப்பு பிணைவைப்புக்கள் சம்பந்தப்பட்ட சகல விபரங்கள் உரிய தூதராலயங்களிலிருந்து பெற்றுக் கொண்டு அதை நிதிபிரமாணத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| விடுதலின் கீழ் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது. வாகன விபத்துக்கள் செலுத்தப்படாத முற்பணம் ஆகியன சம்பந்தமாகவும் அவ்வாறு விபரங்கள் பெற்றுக் கொண்டு நிதிப்பிரமாணங்களுக்கமைவாக திறைசேரியுடன் கருத்துப் பரிமாறி தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

-----------------------------------------------

கீழ்காணும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | ---------------------- | ---------------------------------- |
| (அ) | வாடகை வீடு சம்பந்தமாக வாடகை வீட்டு சொந்தகாரருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் செயல்படாததன் காரணமாக தூதரக அலுவலகத்தால் 2018 மார்ச் 05 ஆம் திகதி வாடகை வீட்டு சொந்தகாரருடன் ரூபா 724,482 (அமெரிக்கா டொலர் 4622) கட்டப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட பணத்தை பொறுப்பேற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டியமை. | ரூபா 724,482 க்கான பணம் சம்பந்தபட்ட உத்தியோகத்தர் அல்லது வேறோரு தரப்பினராலோ தற்செயலாக நேர்ந்ததவறு அன்று. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களினால் செய்யப்படுகின்ற அலுவல்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 2018 மார்ச் 01 திகதியிலிருந்து திருத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.ஆயினும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த நாணய அலகுகள் பயன்படுத்தப்படாத நாடுகளில் சம்பந்தப்பட்ட நாணய அலகுகள் எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பதற்கான பொது விதிமுறையொன்று பேணப்படாத காரணத்தினால் பல்வேறு மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு மாற்று விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஒரு பொதுமுறைமைக்கு அமைய மாற்று விகிதாசாரத்தை நிர்ணயிக்க வேண்டியமை. | சரியான முறைமைக்கமைய மாற்று விகிதாசாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (இ) | ரூபா மில்லியன் 28.16 செலவு செய்து 2016 ஆம் வருடம் மும்பை கவுன்சில் ஜெனரல் காரியாலயம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அப்புதுப்பித்தல் வேலைகள் ஒழுங்காக செய்யப்படாமையினால் 2018 வருடம் மீண்டும் புதுப்பித்தல் வேலைகளுக்காக ரூபா 999,626 செலவு செய்யப்பட்டிருந்தது. | சரியான தரத்திற்கேற்ப புதுப்பித்தல் வேலைகளை செய்ய வேண்டியமை | எதிர்காலத்தில் தரத்திற்கேற்ப புதுப்பித்தல் வேலைகள் செய்வதற்காக அமைச்சு கவனம் செலுத்தும். |
| (ஈ) | 2004 யூன் 28 திகதி வெளியிடப்பட்ட | சம்பந்தப்பட்ட அறிக்கைகளை உரிய | சம்பந்தப்பட்ட தூதராலயங்களுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின்அறிவுரைத் தொடர் இலக்கம் 194 இன் பிரகாரம் வரிகளை மீள் அறவிடப்படுவது சம்பந்தமான மூன்று மாதத்திற்கான அறிக்கை மற்றும் செலுத்தப்பட்ட வரிகளுக்கான விரிவான அறிக்கைகள் தூதராலய 03 அலுவலகங்களால் அமைச்சுக்கு சமர்பிக்க படவில்லை. | முறையில் வரவழைத்துக் கொள்வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டியமை | அமைச்சின் 194 இலக்கம் கொண்ட அறிவுறுத்தல் தொடர் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | 2018 ஆண்டு வெளிநாட்டு தூதராலய 03 அலுவலகங்களால் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா மில்லியன் 6.36 க்கான வரிப் பணத்தை குறைநிரப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் கால தாமதமின்றி வரிபணம் குறை நிரப்பு செய்வதற்கான நடவடிக்கை செய்ய வேண்டியமை. | வரிப்பணம் குறை நிரப்புவதற்கான புது ஆலோசனைகள் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கபடுகின்றது. |
| (ஊ) | இலங்கை மற்றும் கனடா 1958 ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை செய்து கொள்ளப்பட்ட 24 உடன்படிக்கை சம்பந்தமான மற்றும் இலஙகைக்கும் துபாய்க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட 11 உடன்படிக்கை சம்பந்தமாக இலங்கைக்கு கிடைத்துள்ள நன்மைகள் அவ்வுடன் படிக்கைகளின் செற்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளில் உள்ள குறைபாடுகள் ஆகியன சம்பந்தப்பட்ட தகவல்கள் வெளிவிவகார அமைச்சு அல்லது | செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கமைவாக காலத்துக் காலம் தகவல்கள் பேணுதல் வேண்டியமை. | நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் முன்னேற்றத்தை மற்றும் தற்போதைய நிலைமை பற்றிய தகவல்களை சம்பந்தபட்ட அமைச்சசுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லை அவசியமாகின்ற படியால் எதிரில் பதில்கள் முனடவைக்க எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தப்பட்ட தூதராலய பொறுப்பில் இருக்கவில்லை. | | |
| (எ) | கொன்சியுலர் ஜெனரால் காரியாலயத்தால் 2009 ஆம் வருடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தை 2017 ஆம் வருடம் ரூபா 471,518 செலவிடப்பட்டு பழுது பார்க்கப்பட்டிருந்தது. 2018 ஆம் வருடம் அதன் எஞ்ஜின் இயந்திரம் செயலிழந்தமையால் திருத்தப்படுவதற்காக கறாஜில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 செப்டம்பர் மாதம் முதல ரூபா 355,230 க்கான மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | வாகனத்தை திருத்தப் படுவதற்கு அல்லது அமைச்சை அறிவுறுத்தி உரிய நடவடிக்கை எடுத்தல். | இவ்வாகனத்தை தொடர்ந்து திருத்தப்படுவது பொருளாதாரரீதியில் இலாபமற்றதாக முகவர் நிலயமும் திருத்த வேலை செய்த தனியார் கறாஜம் மற்றும் கொன்சல் ஜெனரால் காரியாலயமும் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் வழியுறுத்தப்பட்டிருந்தது. இவ்வாகனத்தை பாவனையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் புது வாகனமொன்று கொள்வனவு செய்வது பற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. |
| (ஏ) | அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பொருகாதார தடை காரணமாக டெஹ்ரானிலுள்ள தூதராலய காரியாலயத்திற்கான வெளிப்பணம் அனுப்புவது துபாய் கன்சியுலர் காரியாலயம் முலம் செய்யப்பட்டு வந்ததுடன் அதற்காக டெஹ்ஹான் தூதுவர் ஒவ்வொரு மாதமும் டெஹ்ஹான் நாட்டிற்கு வர வேண்டி இருந்தது. இச்செயல்பாடானது பாதுகாப்பற்றதும் அதிக | பிரயாணச்செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளமை. | இப்பிரச்சினை சம்பந்தமான அதன் பின்னணி மற்றும் யோசனைகள் பற்றி அறிவுறுத்தி உரிய ஆலோசனைகளுக்காக 2018 மார்ச் 07 ஆந் திகதி இலங்கை மத்திய வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்காலிக நடவடிக்கையாக இவ்வமைச்சினால் 2019 மே 09 ஆம் திகதியிலிருந்து முன் வரும் 03 மாதத்திற்கு போதுமான வெளிப்பணம் ஒரே முறையில் துபாய் |

| | | |
|---|---|---|
| செலவை உண்டு பண்ணுவதுமான காரியமாக அவதானிக்கப்பட்டதுடன் அப்பயணத்தின் டிக்கட் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக 2017 மற்றும் 2018 வருடங்களில் முறையே ரூபா மில்லியன் 5.12 மற்றும் ரூபா மில்லியன் 3.83 செலவு செய்யப்பட்டிருந்தன. | | தூதராலயம் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

-----------------

### 4.1 பொதுமக்களுக்கான சேவைகள் நிறைவேற்றுதல்

---------------------------------------------------------------------------

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பத்திரங்களை அத்தாட்சி படுத்தும் செயல்பாட்டினை பிரதேச செயலகத்தின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்காக 2018 ஆகண்ட் 16 ந் திகதி வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் அரச நிர்வாக அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக் கொண்டிருந்த போதிலும் இதுவரை அந்த நடவடிக்கைகள் பன்முகமாக்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. | புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இன்னும் சில தினங்களில் காலி மாவட்ட பிரதேச செயலகம் ஊடாக சத்தியப்படுத்தும் பன்முக படுத்தும் வேலைத்திட்டம் அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை புது தில்லி உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் கீழ் நிர்வாகிக்கப்படும் ஓய்வு கூடத்திற்கு வருகை தரும் யாத்திரிகர் சம்பந்தமான பெயர் பட்டியலொன்று நடைமுறை படுத்தவில்லை. அக்காரணத்தினால் ஓய்வு கூடத்திலிருந்து கிடைக்கும் நாளாந்த வருமானத்திற்கு அமைய கொடுக்கப்பட்ட பற்றுசீட்டுக்களின் எண்ணிக்கையின் பிழையின்மையை மற்றும் கிடைக்கப் பெற்ற அனைத்து வருமானமும் வங்கியில் இடப்பட்டதா என்பதை ஊர்ஜீதம் செய்வதற்கான போதிய முறையையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அங்கு கடமைக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த தேரர் மற்றும் உத்தியோகத்தர் சம்பந்தமாக ஆளணி சேர்த்துக் கொள்ளும் சீரான விதி முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | புது தில்லி உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் கீழ் இந்த ஓய்வு கூடம் இருப்பதனால் அது மேற்பார்வை செய்யப்படல் வேண்டியமை. | அமைச்சின் உள்ளக பிரிவினால் பரீட்சிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

------------------------------------------------------------------------------

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அமைச்சினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளன. | 2009 யூன் 09 ஆம் திகதிய DMA/2009/01 இலக்கம் கொண்ட முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக மூன்று மாதத்திற்கொரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்பட வேண்டியமை. | 2019 ஆண்டினுள் 04 முறையிலான கூட்டங்கள் நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு ஆண்டு முடிவடையும் போது அமைச்சின் பணிக்குழுவின் வெற்றிடங்கள் மற்றும் மேலதிக எண்ணிக்கை முறையே 87 மற்றும் 05 ஆக இருந்ததுடன் தூதராலய பணிக்குழாமில் 85 | தற்போதைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியமை. | வருடாந்த இடம் மாற்றலை அமுல் படுத்தவதன் மூலம் மற்றும் புதிதாக ஆளணி சேர்ப்பதன் முலமும் அமைச்சினதும் தூதராலய பணிக்குழாமினது வெற்றிடங்களை |

| | |
|---|---|
| எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் இருந்தன. | நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |